செ.வெ.எண்:123 நாள்:26.02.2018

**திருநெல்வேலி மாவட்டத்தில் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் வழங்கப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டில் ரூ.1.05 கோடி மானியத்தில் 35 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்களில் சில

வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டம்

வேளாண்மையில் நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளை அறிமுகப்படுத்தி அவற்றை பிரபலப்படுத்துவதன் மூலம் கூடுதலாக பண்ணை சக்தியை வழங்கிடவும், வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையை ஈடு செய்யவும், வேளாண் பணிகளை உரிய நேரத்தில் முடித்திடவும் வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் 118 விவசாயிகளுக்கு ரூ.74.55 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் இயந்திரங்கள்/கருவிகள் மானியத்தில் வழங்கப்பட்டு உள்ளன.

வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்களை ஏற்படுத்துதல்

வட்டார அளவிலான ரூ.25.00 இலட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் / கருவிகளைக் கொண்ட வாடகை மையங்கள் அமைத்திட தொழில் முனைவோர், விவசாயிகள், விவசாயக்குழுக்களுக்கு 40 சதவிகிதம் (அதிகபட்சமாக ரூ.10.00 இலட்சம் வரை) மானியம் வழங்கப்படுகிறது. நடப்பு நிதயாண்டில் 5 மையங்கள் ரூ.50.00 இலட்சம் மானியத்தில் அமைக்கப்பட்டு உள்ளது.

பண்ணைச் சக்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் கிராம அளவிலான பண்ணை இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் மையங்கள் நிறுவுதல்

விவசாய குழுக்கள்/உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்/கிராம அடிப்படையில் உள்ள இது போன்ற அமைப்புகள் மூலம் ஒவ்வொன்றும் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பண்ணை இயந்திர மையங்களை கிராம அளவில் நிறுவிட ரூ.8.00 இலட்சம் அளவிற்கு அதிகபட்சமாக 80 சதவீத அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது.

குறைந்தபட்சம் 8 உறுப்பினர்களைக் கொண்ட விவசாய குழுக்களுக்கு பண்ணை இயந்திர மையங்களின் திட்ட மதிப்பீட்டில் 80 சதவீத மானியம் வழங்கப்படும். நடப்பு ஆண்டில் 6 மையம் ரூ.48.00 இலட்சம் மானியத்தில் அமைக்கப்பட்டு உள்ளது.

அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மைக்கான இயந்திரங்களை வழங்குதல்

விவசாயிகள், சுய உதவி குழுக்கள், விவசாய உபயோகிப்பாளர் குழுக்கள், விவசாய கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில் முனைவோர் ஆகிய இதர பயனாளிகளுக்கு 50 சதவீதம் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை அதில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும், ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் பயனாளிகளுக்கு அதிகபட்சமாக 60 சதவீதமும் மானியமாக வழங்கப்படுகிறது. நடப்பு நிதயாண்டில் 2 விவசாயிகளுக்கு சூரிய கூடார உலர்த்தி

ரூ.3.10 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உள்ளது 2 எண்ணம் ரூ.3.10 மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.

<u>நில மேம்பாட்டுத் திட்டம்</u>

விவசாயிகளுக்கு நிலத்தினை சமன் செய்யும் பணிக்கு இத்துறையின் மண் தள்ளும் பொறி ரூ.840/மணிக்கு என்ற வாடகையில் வழங்கப்படுகின்றது. உழவு பணிக்காக இத்துறையின் உழுவை இயந்திரங்கள், ரோட்டாவேட்டர், கொழு கலப்பை, சட்டி கலப்பை போன்ற உபகரணங்களுடன் மணிக்கு ரூ.340/- என்ற வாடகைக்கு வழங்கப்படுகின்றது. நெல் அறுவடை இயந்திரம், ஈரமான நிலத்தில் அறுவடை செய்திட செயின் மாடல் இயந்திரம் மணிக்கு ரூ.1,415/- என்ற வாடகையிலும், டயர் மாடல் இயந்திரம் மணிக்கு ரூ.875/- என்ற வாடகையிலும்வழங்கப்படுகின்றது.

**<u>சித்தாறு உபடிவநிலப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்</u>**

இத்திட்டத்தின்கீழ் சித்தாறு பாசனப்பரப்புகளில் பூமிக்கு அடியில் குழாய் பதித்து புவிஈர்ப்பு விசை மூலம் நீர்பாய்ச்சும் திட்டம், பண்ணைகுட்டை அமைத்தல், நிலத்தடி நீர் செறிவு அமைப்பு அமைத்தல், சொட்டுநீர் பாசனம் அமைத்தல், தடுப்பணை அமைத்தல், சூரிய ஒளியினால் இயங்கும் பம்ப் அமைத்தல், கால்நடை தீவன கிடங்கு அமைத்தல் போன்ற பணிகள் ரூ.4.53.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**<u>சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம்</u>**

இத்திட்டத்தின்கீழ் சூரிய சக்தியால் இயங்கும் 5 முதல் 10 குதிரைத்திறன் கொண்ட மோட்டார் பம்பு செட்டுகள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஆர்வமுடைய விவசாயிகளுக்கு 90 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

I) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் இலவச மின் இணைப்பு பெற்றிருந்தால் அதனைத் துறக்க முன் வர வேண்டும்.

II) இலவச மின் இணைப்பிற்கான விண்ணப்பம் அளித்திருந்தால் அதனைத் திரும்ப பெறுவதற்கு சம்மதக் கடிதம் அளிக்க வேண்டும்.

மேற்கூறிய விதிமுறைகளின்படி வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆர்வமுடைய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகள் ஆகியவற்றில் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் அமைத்திட தொழில் நுட்ப ரீதியான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து இறுதி செய்யப்படும். பயனாளிகள் 10 சதவீதப் பங்களிப்பு தொகை செலுத்தியவுடன் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் 90 சதவீத அரசு மானியத்தில் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் நிலங்களில் அமைத்து தரப்படும். நடப்பு நிதியாண்டில் 35 எண்ணம் பயனாளிகளுக்கு சூரிய சக்தியினால் இயங்கும் பம்பு செட்டுகள் ரூ.104.79 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல்த்துறை உள்ளிட்ட துறைகளின் பிரிவு அலுவலகங்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ளது. விவசாயிகள் அலுவலகங்களுக்கு சென்று அரசின் திட்டங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.